உயர்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

<u>கடிதம் எண்.8483/ஜே1/2010, நாள் 17.5.2010</u>

அனுப்புநர்
திரு க.கணேசன்.இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
அனைத்து மாவட்டங்கள்.

ஐயா / அம்மையீர்,

பொருள்: சான்றிதழ் – 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் தொழிற் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்கள் கல்வி கட்டணம் சலுகை பெற வருவாய்த்துறையின் சான்றிதழ் வழங்குவது – குறித்து – தெளிவுரைகள் – தொடர்பாக.

பார்வை:

1) அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 16.4.2010.
2) அரசு நே.மு.க.எண்.427/ஜே2/2010–1, நாள் 16.4.2010.
3) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5. நே.மு.க.எண்.வ.நி.5(3)/25864/2010, நாள் 22.4.2010.

–––––

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அரசு / அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சட்டக் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் மாணவர்களில் அவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லையென்றால், அம்மாணவர்கள் தொழிற்கல்வி பயிலுவதை ஊக்குவிப்பதற்காக, சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் வரும் கல்வியாண்டு முதல் (2010–2011) அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என ஆணையிடப்பட்டுள்ளது.

**2.** பார்வை மூன்றில் காணும் நேர்முகக் கடிதத்தில் மாணவர்கள் அல்லது மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலர்கள் மேற்குறிப்பிட்ட சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பம் செய்தால் அவ்விண்ணப்பத்தின் மீது தகுந்த விசாரணை மேற்கொண்டு, அவ்விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பம் பெறப்பட்ட **5** நாட்களுக்குள் சான்றிதழ் வழங்கவும், இவ்வினங்களுக்கு அதிக முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், இச்சான்று வழங்குவதில் சிறிதேனும் காலதாமதமோ அல்லது அசிரத்தையோ இருக்கலாகாது எனவும் சான்று அளிக்க அதிகாரம் படைத்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கு (வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள்) தக்க அறிவுரைகள் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

**3.** தற்பொழுது சில வட்டாட்சியர்கள் / துணை வட்டாட்சியர்கள் D.M.E. D.E.E., D.C.E. மற்றும் D.Pharm போன்ற பட்டய படிப்பினை விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் படித்திருந்தால் இதனை பட்டப் படிப்பாக கருதி பட்டதாரி இல்லாத குடும்பத்தைச் சார்ந்தவர் என சான்றிதழ் வழங்க மறுப்பதாக அரசுக்கு தகவல்கள் பெறப்படுகிறது. இந்நிலையில் D.M.E., D.E.E., D.C.E. மற்றும் D.Pharm. போன்ற பட்டயப் படிப்புகளை (Diploma) பட்டப் படிப்பிற்கு இணையாகக் கருத இயலாது. இப்படிப்புகள் பட்டப் படிப்பிற்கு இணையானதும் அல்ல. எனவே, இது தொடர்பாக வட்டாட்சியருக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–5.

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.

பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25 / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி.